DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 255/2024 |
| Deposition of Witness for | : | P.W. 3 |
| Name | : | **ராஜாராம்** |
| Father's Name | : | **போஸ்** |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

**(வழக்கின் எதிரிகள் 3,6,7,9 ஆஜர். 1, 2, 4, 5, 8, 10, 11 எதிரிகள் ஆஜர் இல்லை. 1, 2, 4, 5, 8, 10, 11 எதிரிகள் சார்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 28.07.2025

<u>முதல் விசாரணை:</u>

1. நான் தற்போது சிவகங்கை சித்தலூாரியில் குடியிக்கிறேன். நான் சென்னையில் ஆயில் ஸ்டோர் வைத்து தொழில் செய்து வருகிறேன். அ.சா.1. முத்துராஜா, அ.சா.2 முத்துப்பாண்டி மற்றும் வழக்கின் எதிரிகள் அனைவரையும் எனக்கு தெரியும். கடந்த 16.09.2019 ல் தேதி வைரம்பட்டியில் ஏலம்மாள் என்வருக்கும் நாகராஜன் என்பவருக்கும் இடையே ஏற்பட்ட தகராறில் சிப்காட் காவல்நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு அதில் நானும் அசா-1 மற்றும் அசா.2 ஜாமீன் பெற்று நிபந்தனை ஜாமீனில் கையொப்பம் செய்வதற்காக சிப்காட் காவல்நிலையத்திற்கு சென்று கொண்டிருந்தோம்.

2. அதன்படி 01.11.2019ம் தேதி நிபந்தனை ஜாமீன் படி கையொப்பம் செய்வதற்காக நானும்,. அ.சா.1 முத்துராஜா, அ.சா.,2 முத்துப்பாண்டி ஆகியோரும் புல்லட் பைக்கில் மானாமதுரையை நோக்கி சென்று கொண்டிருந்தோம். பைக்கை முத்துராஜா என்பவர் ஓட்ட நானும் முத்துப்பாண்டியும் பின்னால் உட்கார்ந்து சென்றுகொண்டிருந்தோம். உருளி விலக்கிற்கும் காட்டுரணி விலக்கிற்கும் இடையே காலை 9.45 மணியளவில் நாங்கள் சென்று கொண்டிருந்தபோது போலிரோ வாகனத்தில் வந்த எதிரிகள் நாங்கள் சென்ற பைக்கின் பின்புறத்தில் மோதினார்கள்.

3. மோதியதில் பைக்கிலிருந்து நாங்கள் மூவரும் கீழே விழுந்துவிட்டோம். பொலிரோ வாகனத்தில் வந்த முத்துப்பாண்டி, அழகுசுந்தரம், முத்துசாமி, செல்லப்பாண்டி, பசுபதி, கருப்பு, பாண்டி, பாலமுருகன், அங்குவிஜயன், செல்லம், வைரமணி, முரட்டுக்காளை, ஏலம்மாள், முத்துராணி ஆகியோர் கையில் கத்தி மற்றும் அருவாளுடன் வண்டியிலிருந்து இறங்கி எதிரி முத்துச்சாமி என்பவர் எனது இடது முன்கையில் வெட்டினார். எதிரி பாலமுருகன் எனது வலது முன்கையில் அருவாளால் வெட்டினார். எதிரி அங்கு விஜயன் என்னை அருவாளால் இடது கால் முட்டியில் வெட்டினார். எதிரி பசுபதி அருவாளால் இடது கால் பாதத்தில் வெட்டினார். என்னை எதிரி கருப்பு என்பவரும் அருவாளால் இரு கால்களிலும் முட்டியிலும் வெட்டினார். என்னுடன் வந்த முத்துப்பாண்டியை எதிரிகள் செல்லப்பாண்டி என்பவர் வெட்டினார். அ.சா1 முத்துராஜாவிற்கு சம்பவ நேரத்தில் தலைக்கவசம் அணிந்திருந்ததால் லேசான காயம் ஏற்பட்டது. அதன்பிறகு சிப்காட் போலிசார் அந்த இடத்திற்கு வந்தார்கள்.

4. சிப்காட் போலிசார் வந்து ஆம்புலன்சு மூலமான காயம்பட்ட எங்களை சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். சிவகங்கை அரசு மருத்துவமனையில் எங்களுக்கு முதலுதவி சிகிச்சை அளித்து மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். மதுரை ராஜாஜி மருத்துவமனையில் போதுமான சிகிச்சை இல்லாததால் மதுரை

மீனாட்சி மிசன் மருத்துவமனையில் காயம்பட்ட நானும், முத்துப்பாண்டியும் அனுமதிக்கப்பட்டோம். அ.சா.1 முத்துராஜாவிற்கு லேசான காயம் என்பதால் அவர் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை எடுக்கவில்லை. வெளி நோயாளியாக மட்டும் சிகிச்சை எடுத்துக்கொண்டார். சம்பவம் நடந்த அன்றே சிப்காட் போலிசார் மதுரை மீனாட்சி மிசன் மருத்துவமனையில் வந்து என்னை விசாரித்தார்கள். நான் மதுரை மீனாட்சி மிசன் மருத்துவமனையில் சுமார் 20 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டேன்.

5. இச்சம்பவம் பற்றி நாகராஜ், சிவா, கருப்பச்சாமி ஆகியோர்களுக்கு தெரியும். சம்பவத்தில் எதிரிகள் என்னை வெட்ட பயன்படுத்திய அருவாளை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல இயலும். எதிரிகள் பசுபதி, கருப்பு ஆகியோர் என்னை தாக்க பயன்படுத்திய அருவாள் தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படுவது தான். அந்த **அருவாள் அ.த.பொ.சா 3** ஆகும். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் பட்டாகத்தி சம்பவத்தில் எதிரிகள் முத்துச்சாமி, பாலமுருகன் ஆகியோர் தாக்க பயன்படுத்தியது ஆகும். அந்த **பட்டாக்கத்தி அ.த.பொ.சா 4** ஆகும். இவ்வழக்கு சம்மந்தமாக சிப்காட் போலிசார் விசாரித்தார்கள்.

**(எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 231(2) ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டு குறுக்கு விசாரணை நிறுத்தி வைக்கப்படுகிறது)**

N SENTHIL MURALI
Digitally signed by N SENTHIL MURALI
Date: 2025.07.28 11:31:10 +0000

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,**

**சிவகங்கை.**